


திருவாசகம் - 15
திருத்தேனோக்கம் கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



## என்னுரை

திருத்தோணோக்கம் என்பது பெண்கள் விளையாடும் ஒருவகையான விளையாட்டு. மாணிக்கவாசக சுவாமிகள் விளையாட்டுடன் சேர்த்தே திருவாசகத்தைப் பாடியுள்ளார். விளையாட்டுக்கள் மகிழ்வைக் கொடுப்பன. அதுவும் அழகிய மகளிர் சோடி சேர்ந்து ஆடிப்பாடி விளையாடினால் எவ்வளவு மகிழ்வு உண்டாகும். பெண்களுடன் சேர்ந்து தாமும் ஆடிப்பாடுவதாக மாணிக்கவாசக சுவாமிகள் நினைக்கிறார். அதனால் சிவன் மகிழ்வாரென்று நினைக்கிறார். பெண்களின் விளையாட்டுக்கள் படிப்போர்க்கு இன்பத்தைத்தந்து அந்நினைவை அகற்றும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் நினைக்கிறார் போலத் தெரிகிறது.

*கே.வி.குணசேகரன்*

உ

சிவமயம்

# திருத்தேனோக்கம்

## பிரபஞ்ச சுத்தி

## தில்லையில் அருளியது

## நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

**பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்**

**பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே**

**தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்**

**கூத்தா உன் சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம். 01**

மகாலிங்கம் இளமைக்காலத்தில் சிவனை நம்பாது நாத்திகம் பேசியவர். அவரிடம் எல்லாவிதமான தீய பழக்கவழக்கங்களும் இருந்தன. பின் அவர் திருந்திச் சிவனடியாராகிவிட்டார். அவர் சிவன்மீது கொண்ட பற்றுக் காரணமாக தமிழ்நாட்டிலுள்ள சிவத்தலங்கள் யாவற்றிற்கும் சென்று சிவனை வணங்கி வந்து சிவசேவை செய்பவர். அவர் தீயசெயல்கள் செய்து கொண்டு திரியும் காலத்தில் கலையரசி என்ற பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தவர். பின்பு திருந்திய பின்பு அவளுக்குப் பல இலட்சங்களைக் கொடுத்து அவளைத் தன்னுடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்று சொன்னவர். ஆறு மாதங்கள் கழிய அவள் வந்து சொன்னாள்; “உங்களுக்கு யாரும் இல்லை. அதுபோல எனக்கும் யாரும் இல்லை. உங்களது மனைவி இறந்தமையால் நீங்கள் சாப்பாட்டுக் கடைகளில் சாப்பிடுகிறீர்கள். ஓரிரு நாளென்றால் பரவாயில்லை. நெடுகச் சாப்பிட்டால் உடம்பு கெட்டுவிடும். அதனால் நான் வந்து சமைத்துத் தருகிறேன்” என்றாள்.

“ஐயையோ, எனக்கு கானல்நீர் போன்ற பொய்யான வாழ்க்கை வெறுத்துவிட்டது. முன்பு அறியாமையால் கானல் நீரைப் பூக்கள் நிறைந்த பொய்கை நீர் என்று நினைத்து அதனை அள்ளி அள்ளிக் குடிக்கலாமென்று நினைத்து வாழ்ந்துவிட்டேன். அப்போது உனது மயக்கமான வார்த்தைகளும், மோகத்தைத்தரும்

சிறப்பும் உண்மையானது என்று நினைத்ததால் கெட்டழிந்து போனேன்; இத்தகைய மயக்கத்தைச் சிவனொருவனால் தான் நீக்கமுடியுமென்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதைச் சிவன் நீக்கியமையால் அவர் சிவனது திருவடியைச் சேர முயல்கிறேன்" என்கிறார். அதைத்தான் நானும் விரும்புகிறேன். இந்த பொய்மையான உலகின் மாயத்தை நம்பி ஏமாற நான் தயாரில்லை. எனக்குப் பிள்ளைகள் இருக்கு. அவர்கள் உணவு தருவார்கள். இல்லாவிட்டால் ஆச்சிரமத்தில் உணவு தினமும் கொடுக்கிறார்கள். அங்கே உண்பேன். நீ இப்பொழுது மயக்கமான கதைகளைப்பேசி என்னை ஏமாற்றலாமென்று நினைக்காதே. சென்றுவிடு. இன்மேல் இப்பக்கம் வராதே. கானல் நீரைப் பொய்கை நீரென்று நம்பிநான் பட்டதுன்பங்கள் போதும்" என்றார் மகாலிங்கம்.

**என்றும் பிறந்திறந் தாழாமே ஆண்டுகொண்டான்**

**கன்றால் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய**

**குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்**

**துன்றார் குழலினீர் தோணோக்கம் ஆடாமோ. 02**

"கலையரசி, கிருஷ்ணனைக் கொல்ல ஓர் அசுரன் மாயமான கன்றுக்-குட்டியின் உருவில் வந்தான். மற்றோர் அசுரன் மாயக்கனியுடைய விளாமரமாக நின்றான். அதைத்தனது ஞானத்தால் கண்டு கொண்ட கிருஷ்ணன் அந்தக் கன்றால் விளாமரத்தை அடிக்க இரண்டும் அழிந்தன. அவ்வாறு அசுரர்களை அறிந்து கொன்ற கிருஷ்ணனை அரியும் அயனும் எங்கெல்லாம் தேடியும் சிவனின் அடியையும் முடியையும் கண்டு கொள்ளாமைக்குக் காரணம் ஆணவமேயாகும். அதனால் சிவபெருமான் என்மீது கருணை கொண்டு நான் பிறவிக்கடலில் அழுந்தாமல் காப்பாற்ற என்னை ஆட்கொண்டான். அதனால் நெருக்கமான அழகிய கூந்தலையுடைய பெண்களே தில்லையம்பலவனுடைய திவ்விய குணங்களை புகழ்ந்து தேணோக்கம் என்ற விளையாட்டை விளையாடுவோம்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். எனது பற்றுக்களையெல்லாம் சிவன் அறுத்து என்னைத் தூய்மைப்படுத்தித் தன்னைப் புகழ்ந்து பாடி ஆடும்படி பணித்துள்ளான். இனி எனது மனது மாறமாட்டாது. அதனால் சென்று வா" என்றார் மகாலிங்கம்.

**பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கிச்**

**செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்**

**விருப்புற்று வேடனானா சேடெறிய மெய்குளிர்தங்கு**

**அருட்பெற்று நின்றவர் தோணோக்கம் ஆடாமோ. 03**

"சிவனுக்கு மிக விலையுயர்ந்த பூசைத் திரவியங்களால் ஆசாரத்துடன் பலரும் பூசை செய்ய, கண்ணப்பன் செருப்பணிந்த தனது காலால் சிவனின் கண்ணை அடையாளமாக வைத்தவன். பன்றியின் இறைச்சியைச் சுட்டுச் சுவைபார்த்துவிட்டுத் தனது வாய்க்குள் நீரைக் கொண்டு வந்து சிவன்மீது கொப்பளித்துவிட்டு எச்சில் பட்ட இறைச்சியைச் சிவனுக்குப் படைத்தவன். அதை அமிர்தம் என்று நினைத்துச் சிவன் உண்டவர். அப்படிப்பட்ட சிவனின் வரலாற்றைப் புகழ்ந்து தேணோட்டம் ஆடுவோம்" என்கிறார் மாணிக்கவாசகர். அசுரர்கள் பல கொடுமைகளைச் செய்தபோதும் அவர்கள் தவம் செய்தபோது அவர்கள் கேட்ட வரத்தைச் சிவன் கொடுத்தவர். வரம் பெற்ற அசுரர் தாம் தாம் சிவனைவிடப் பெரியவர்கள் என்று நினைத்துச் சிவனோடு போராட முற்பட்டபோதுதான் சிவன் கோபங்கொண்டு அவர்களை அழித்தவர். சிவன் தாயினும் பார்க்க இரக்கம் மிக்கவன். எந்தப் பாவத்தையும் மன்னிக்கும்படி கேட்டு வணங்கினால் மன்னிப்பான். அவன் மன்னித்தபின்பு அதே பாவத்தைச் செய்தால் தான் தண்டிப்பான். அதனால் நான் செய்த பாவங்களை மன்னிக்குமாறு கேட்டு அவன் மன்னித்துவிட்டான். இனி நான் அப்பாவங்களைத் திரும்பவும் செய்தால் அவன் மன்னிக்காது, அசுரர்களைத் தண்டித்ததுபோலத் தண்டிப்பான். அதனால் நான் மீண்டும் பாவங்களைச் செய்ய விரும்பவில்லை. அதனால் சென்று விடு" என்றார் மகாலிங்கம்.

**கற்போலும் நெஞ்சங் கசிந்துருகிக் கருணையினால்**

**நிற்பானைப் போலஎன நெஞ்சினுள்ளே புகுந்தருளி**

**நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்**

**சொற்பால தானவா தோணோக்கம் ஆடாமோ. 04**

"மாணிக்கவாசகரது திருவாசகத்தைப் படித்த பின்புதான் எனக்கு உலகம் புரிந்தது. அவர் சொல்கிறார்; "கல்லுப்போல இருந்த எனது கல்நெஞ்சை அவன் கசிந்து உருகப் பண்ணினான். கருணைகூர்ந்து என் எதிரில் பிரசன்னமானான் போன்று தென்பட்டான். நிலைத்து என்நெஞ்சில் குடிபுகுந்தான். நல்லொழுக்கத்தில் என்னை

நிலைபெறச் செய்தான். அவனை உலகத்தவர்கள் அறிந்து கொள்ளும்படி சொல்லோவியம் வரைய என்னை நியமித்துள்ளான்" என்கிறார். அப்படி என்னால் வாழமுடியாது. ஆனால் அவன் நினைவாக அவனது பெருமைகளைக் கூறும் திருமுறைகளை ஓதி ஒழுக்கமுள்ளவனாக வாழமுடியும் தானே. குடித்து வெறித்து மனம்போனபடி வாழ்ந்து கொண்டிருந்த என்னைக் கதிரேசனின் வடிவில் வந்து திருந்தி ஒழுங்காக வாழச் செய்துள்ளான். திருமுறைகளை ஓதி அவனை வணங்குவதால் எனது உள்ளம் பண்பட்டுவிட்டது. அதனால் அவன் என்நெஞ்சில் மிகவும் மகிழ்வோடு இருக்கிறான். அத்துடன் எனது தீய பழக்கவழக்கங்களை நீக்கி என்னைச் சுத்தப்படுத்தியுள்ளான். அதனால் பழைய தீயவாழ்வை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. முன்பு நான் சிவனோடு ஐக்கியப்படுமுன் உன்னோடு கோபிப்பேன். நீ சில நாட்களுக்குச் சென்றுவிடுவாய். பின் எனக்கு உனது மோகம் பிடித்துவிடும். அதனால் தேடி வருவேன். நீ வரமாட்டன், உன்னுடைய உறவு வேண்டாம் நான் உழைத்துச் சாப்பிடுவேன் என்பாய். நான் கெஞ்சிக் கூத்தாடி உன்னை அழைத்து வருவேன். இப்போ அந்த நிலைமாறிவிட்டது என்று உனக்குத் தெரியும். அதனால்தான் நீ என்னைத் தேடி வருகிறாய். எனது மனம் இனி ஒருபோதும் மாறாது. அதனால் சென்று வா. உனக்கு நான் அதிகமாகப் பணம் தந்துவிட்டேன். இப்போ தந்தால் மீண்டும் பணத்திற்காக வருவாய். அதனால் இனிமேல் பணம் தரமாட்டன்" என்றார் மகாலிங்கம்.

**நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்**

**புலனபாய மைந்தனோ டெண்வகையாயப் புணர்ந்துநின்றான்**

**உலகே ழெனத்தழிசை பத்தெனத்தா னொருவனுமே**

**பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ. 05**

அவர்கள் கதைத்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த நல்லைநாதனும் சிவராசாவும் அங்கு வந்தனர். அதைக்கண்டு மகாலிங்கமும் கலையரசியும் அதிர்ச்சியடைந்தனர். மகாலிங்கம் தடுமாறியபடி சொன்னான்; "எனக்கு இவளில் விருப்பமில்லை. நிலம், நீர், நெருப்பு, உயிர், ஆகாயம், சந்திரன், சூரியன் ஆகிய அட்டமூர்த்திகளாகவும், ஏழு உலகங்களாகவும், பத்துத்திசைகளாகவும் இருப்பவன் சிவன். அது உண்மையென்று உணர்ந்து திருந்தி அவரை வணங்குகிறேன். எல்லாமாகவும், எல்லாத் திசையாகவும் இருக்கும் சிவன் தான் என்னைக் காப்பாற்றுதல் வேண்டும். நான் என்ன சொன்னாலும் யாரும் நம்பமாட்டார்கள். ஏனென்றால் நான்

வாழ்ந்த வாழ்க்கை அப்படி. கலையரசியை எப்போ தொட்டதற்காக இவ்வளவு துன்பம் வருமென்று நான் நம்பவில்லை. பசைபோல ஒட்டியிருந்து ஓயாது துன்புறுத்துகிறாள். நான் எங்கு போனாலும் அங்கு வந்து துன்பத்தைத் தருகிறாள். சிவனே, என்னைக் காப்பாற்று என்று அழுதான்" மகாலிங்கம்.

"கவலைப்படாதை மகாலிங்கம். உன்னை நம்பவைக்கத்தான் சிவன் எம்மை இங்கு அனுப்பினான். சிவன் நிலம் முதலிய அட்டமூர்த்திகளாகவும், ஏழு உலகங்களாகவும், பத்துத் திசைகளாகவும் இருப்பதால் எதையும் யாராலும் மறைக்க முடியாது. நீ திருந்தித் தமிழ்நாட்டிலுள்ள சகல சிவத்தலங்களுக்கும் சென்று வந்தபோதும் எமக்கு உன்னில் ஒரு சந்தேகம் இருந்தது. நெய்யை வைத்த சட்டி நெய் முடிந்து பல மாதங்களானாலும் அதன் வாசம் போகாது. அதுபோலத் தீயசெயல்களைச் செய்வோர் திருந்திவிட்டதாகக் கூறினாலும், அத் தீயசெயல்களின் தன்மை சிறிதளவு இருக்கும் என்று நினைத்தேன். தற்செயலாக இப்பாதையால் வரநேர்ந்தது. அப்போது கலையரசி தன்னை அலங்கரித்துக் கொண்டு வருவதைக் கண்டேன். அதனால் நல்லைநாதன் அண்ணையையும் அழைத்துக் கொண்டு வந்தேன். நீ சொல்வது உண்மை. எங்கும் பரந்து, எதிலும் கலந்துள்ள சிவன், உனது நிலையைப் புலப்படுத்தத்தான் இப்படியான செயல்களைச் செய்துள்ளார். கதிரேசண்ணைக்கு உனது நிலைபற்றிக் கைத்தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளேன். அவர் வருவார்" என்றான் சிவராசா.

சிறிது நேரத்தில் அங்கு வந்த கதிரேசன் கலையரசிக்குச் சொன்னார்; "மகளே, ஒருவருக்குத் தொடர்ந்து துன்பம் செய்யக்கூடாது. மகாலிங்கம் உன்னில் ஆசைப்பட்டது உண்மை. அது தகாத ஆசை என்று தெரிந்து உன்னை விலக்க விலக்க நீ தொடர்ந்து வந்து தொந்தரவு கொடுப்பது நல்லதல்ல. உனக்கு வேண்டிய உதவிகளைச் செய்துள்ளான். அதனால் அவனைவிட்டு விலகிச் சென்றுவிடு. நீ பத்தினியாக இருந்தால் மனைவியை இழந்த அவனோடு உன்னைச் சேர்த்து வைக்கலாம். உனது நிலை உனக்குத் தெரியும். அதனால் சென்றுவிடு. அது உனக்கு நல்லது" என்றார் கதிரேசன். கலையரசி எதுவும் பேசாமல் வெளியே சென்றாள்.

**புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்**

**தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்**

**சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்**

**அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ. 06**

“மகாலிங்கம் மாணிக்கவாசகரது காலத்தில் சமணரும், பௌத்தர்களும் சைவத்திற்கெதிராகப் பல சூழ்ச்சிகள் செய்து சைவமக்களைத் துன்புறுத்தினர். மதவெறி என்றும் மதத்தில் உழல்பவர்களை எல்லாச்சமயத்திலும் காணலாம். இப்போ மக்களுக்கு எத்தனையோ துன்பங்கள், உணவு இல்லை, நீரில்லை, வேலையில்லை, மனநிம்மதியில்லை என்று ஒவ்வொருவரும் சொல்லிக் கடவுளை வெறுக்கின்றனர். இவையெல்லாம் மெய்யடியார்க்கு இல்லை. கடவுளை வணங்குகிறோம் என்று கடவுளை வணங்குகிறார்கள். அதை மகிழ்வுடனும், அர்ப்பணிப்புடனும், நிம்மதியாகவும் செய்கிறார்களா…? ஒருவன் உணவை ஆற அமர இருந்து கடவுளை வணங்கி, அவ்வுணவைத் தந்ததற்காக நன்றி சொல்லி உணவை மகிழ்வுடன் உண்ண வேண்டும். அப்படி உண்பவர்கள் எத்தனை பேர். அவசர அவசரமாக உண்கின்றனர். வாகனத்தில் பயணித்தவாறு உண்கின்றனர். நின்றும், நடந்தும் உண்கின்றனர். மனிதன் வாழ்வது இன்பம் அனுபவிக்க. அந்த இன்பம் உணவில் உண்டு, குடும்ப உறவில் உண்டு என்பதை யார் அறிகிறார்களோ, அவர்கள் தான் பேரின்பமாக வாழ்கின்றனர். நேற்று ஒருவர் இரு சக்கர வாகனத்தில் கோவிலுக்கு வந்து தலைக்கவசத்துக்குக் குட்டி வணங்கிவிட்டு அவசரமாகச் செல்கிறார். கடவுளை வணங்கும்போது நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும், பொறுமையாகவும் இருந்து வணங்குதல் வேண்டும். சித்தத்தைச் சிவன்பால் வைத்து, நான் செய்வதெல்லாம் சிவனுக்குரிய தவச்செயல் என்று நினைத்து, அவனது கருணையை முழுமையாக உணர்ந்து வணங்க வேண்டும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். கடவுளை வணங்க, உணவை உட்கொள்ள நேரத்தை ஒதுக்க முடியாதவன் நரக வாழ்வே வாழ்கிறான். இரண்டிற்கும் நேரம் ஒதுக்கியவன் பேரின்பமாக வாழ்கிறான். நேரம் முழுவதையும் உழைப்புக்குச் செலவிடுபவன் வாழ்க்கையில் எதை அனுபவித்தான். போலியான இன்பங்களை நிசமான இன்பம் என்று நினைக்கும் அறிவிலிகள் பௌத்தர்கள். அவர்கள் எங்கிருந்தாலும் மகிழ்ச்சியாக வாழமாட்டார்கள்.” என்றார் கதிரேசன்.

**தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்**

**சாதியும் வேதியன் தாதையனைத் தாளிரண்டுஞ்**

**சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்**

**பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். 07**

“மகளே, சிவபூசை மகாபாதகச் செயல்களையும் நன்மையாக மாற்றும் தன்மையுள்ளது. மேலும் மேலும் பாவத்தைச் செய்யாதே. அது உன்னை நரகத்தில்

இருந்து மீளவிடாது. மனிதர்களைப் புண்ணியவான்களாக மாற்ற வேண்டும் என்பதுதான் சிவனது கருணையான விருப்பம். அதை அறியாத பலர் தொடர்ந்தும் பாவம் செய்து கீழ்நிலையை அடைகின்றனர். பாவம் என்று தெரிந்தும் அப்பாவத்தைச் செய்பவன் பிறக்கும் பிறப்பெல்லாம் பெரும் துன்பப்படுவான் சண்டேசுவரர் சிவபூசை செய்து கொண்டிருக்கும்போது அவரது தந்தை அதைச் செய்யவிடாது தடுத்தார். அவரைத் தனது காலால் உதைத்தார். தந்தையானாலும் சிவபூசையைக் குழப்புவது பாவம். அதனால் கோபங்கொண்ட சண்டேசுவரர் ஒரு தர்ப்பைப் புல்லை எடுத்துவீச அது கூரிய வாளாக மாறிச் சண்டேசுவரரின் தந்தையின் கால்களைத் துண்டித்தது. அது மகா பாவமாகும். பெற்று வளர்த்த தந்தை குற்றம் செய்தாலும் அதைத் தண்டித்தால் மீள முடியாத பாவம் உண்டாகும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. சிவனருளால் அப்பாவச் செயல் புண்ணியச் செயலாக மாறியது. சண்டேசுவரர் சிவகதியை அடைந்தார். அப்பாவத்தை விட நீ செய்வது பெரும் பாவமல்ல. நீ இரண்டு குற்றங்களைச் செய்கிறாய். ஒன்று விபச்சாரம் செய்வது. இரண்டாவது ஒரு சிவபக்தரை மிரட்டிப் பணம் பறிப்பது. முன்பு மகாலிங்கம் உனது வாடிக்கையாளனாக இருந்தவன். நீ பத்தினி அல்ல. பலருடன் பணத்திற்காகக் கூடி இன்பத்தைக் கொடுப்பவள். தான் செய்த பிழைக்காக மகாலிங்கம் உனக்குப் பெருந்தொகைப் பணம் தந்துள்ளான். அத்துடன் திருப்பதிப்படு. ஒருவர் அறியாமையால் பல பாவங்களைச் செய்வார். அது பாவம் என்று தெரிந்த பின் தொடர்ந்து செய்தால் பெரும் பாவங்களைச் செய்யும் பாவியாவாய். முன்பு மகாலிங்கம் உணர்ச்சிகள் மிகுந்த மனிதன். மிருகம் என்று கூடச் சொல்லலாம். இப்போ அவன் உண்மையான சிவபக்தன். அவன் சிவனிடம் முறையிட்டு மனம் வருந்தினால் ஒரு சிவபக்தனுக்குத் துன்பஞ் செய்பவளாக நினைத்துத் தண்டிக்கப்படுவாய். இப்போ ஊரவர் உன்னையும் உனது நோக்கத்தையும் புரிந்து கொண்டனர். அதனால் ஊரை விட்டுத் துரத்த முடிவு செய்துள்ளனர். அதனால் திருந்தி வாழ விரும்பினால் வாழ். இல்லாவிட்டால் பெருந்துன்பப்படுவாய்” என்றார் கதிரேசன். அதைக் கேட்ட கலையரசி திகைத்துப் போனாள். முன்பு மகாலிங்கத்தை வெருட்டிப் பணம் சம்பாதித்தபோது யாரும் கேட்கவில்லை. இப்போ கதிரேசன் அதில் கவனமெடுத்தமையால் இனித் தப்ப முடியாது என்று நினைத்துக் கலங்கினாள் கலையரசி.

**மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்**

**வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்**

**ஆனந்தக் கூத்தன் அருள்பெறில் நாம் அவ்வணமே**

**ஆனந்த மாகிநின் றாடாமே தோணோக்கம். 08**

“அண்ணை, முன்பு இரத்தத்துடிப்பால் பல சிவத்துரோகங்களை நான் நண்பர்களோடு சேர்ந்து செய்தேன். குடித்துவிட்டு வெறியில் என்ன செய்வது என்று புரியாது பல சிவத்துரோகங்களைச் செய்து மகிழ்ந்தேன். மனைவி இறந்தது எனக்கு வாய்பாக மாறியது. அவள் இருந்தால் நிம்மதியாகக் குடிக்கமுடியாது. அவள் பெரும் சிவபக்தை. அவள் மாமிசம் உண்பதில்லை. வீட்டில் மாமிசம் சமைக்கவும் விடமாட்டாள். என்னோடு மகிழ்வாகக் கூடியிருக்கவும் மாட்டாள். சிவபக்தையான அவள், எவ் வேளையிலும் குடித்து விட்டு மாமிசம் உண்ணும் என்னை ஓர் அற்பசீவனாகக் கருதினாள். அவள் என்னுடன் வாழ்ந்த காலமெல்லாம் நரகத்தில் தான் வாழ்ந்தாள். அதனால் எனது குடிக்கும் எண்ணத்திற்கு தடை போடாது ஊக்குவிக்கும் கலையரசியை நான் வைப்பாட்டியாக்கினேன். அதனால் அவள் வாய்க்கு ருசியாக மாமிசங்களைச் சமைத்துத் தருவாள். என்னை எவ்வேளையிலும் போதையில் வைத்திருப்பாள். வீட்டுக்கு வரும் எனது குடிகார நண்பர்கள் பலருடன் உறவு வைத்திருந்தாள். இது தெரிந்தபோதும் என்னால் அதைத் தடை செய்ய முடியவில்லை. விரக்தியின் உச்சியில் இருந்தேன். தற்கொலை செய்யலாமா என்று கூட நினைத்தேன். அப்போது தான் உங்களின் தொடர்பு மிக நெருக்கமாக ஏற்பட்டது. சிவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தீர்கள். ஏனோ தெரியவில்லை பரம எதிரியாக இருந்த பரமன், உயிர் நண்பனானான். அதன் பின் அவனிடம் எல்லாவற்றையும் முறையிடுவேன். அது மனநிம்மதியைக் கொடுத்தது. தமிழ்நாட்டிலுள்ள சிவத்தலங்களைத் தரிசித்த பின் நான் முழுமையான சிவத்தொண்டனாகிவிட்டேன். நான் உயர்சாதி வேளாளன். குடிக்கும்போது சாதித் திமிருடன் நடந்து கொள்வேன். அதனால் பலர் என்னைத் தாக்கியுள்ளனர். அவற்றை நினைக்க எனக்கு வெட்கமாக உள்ளது. இப்போ சிவனின் அருளால் சாதி, குலம், கோத்தரம் என்பவற்றையெல்லாம் கடந்து விட்டேன். உலக நடைமுறைகளையும் மீறும் தன்மை வந்துவிட்டது. ஆனந்தக் கூத்தனோடு ஐக்கியமாகிவிட்டதால் எல்லோரும் சிவனடியார்கள். எல்லோரும் சிவனின் அன்புக்குப் பாத்திரமானவர்கள் என்ற நினைப்பு வந்துவிட்டது. சிவனடியானான வரதன் பறைமேளம் அடிப்பவன். அவன் ஓர் உயர்ந்த சிவனடியான். சிவனுக்குத் தொண்டு செய்வதை எனது பிள்ளைகளும் இனத்தவர்களும் விரும்புவதில்லை. நான் பறைமேளம் அடிப்பது தமக்கு அவமானம் என்கின்றனர் என்று சொல்வான். அதனால் அவன் சென்ற வெள்ளிக்கிழமை சிவனுக்குப் பொங்கிப் படைத்தபோது பொங்கலை வாங்கியுண்டேன். அவன் மிகுந்த மகிழ்வுடன் சொன்னான்; “ஐயா, நான் அன்புடன் பொங்கிப் படைப்பதைச் சிவன் மகிழ்வுடன் ஏற்று உண்கிறார் என்று எனக்குத் தெரியும். இப்போ அது உறுதியாகிவிட்டது. சாதித்திமிர் பிடித்து

எம்மை அவமதித்த நீங்கள் ஒரு சிவபக்தர் அல்ல. சிவபக்தராக நடிக்கிறீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் உண்மையான சிவபக்தர்" என்று என்னை வணங்கினான். அது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தந்தது. "நான் பொங்கினால் கதிரேசன் ஐயா வாங்கியுண்பார். அது புதுமையல்ல. ஏனென்றால் அவர் நடமாடும் சிவன். சிவனின் குணங்கள் யாவும் அவரிடம் உண்டு. ஆனால் மகாலிங்கம் சிவத்தோல் போர்த்த சாதிவெறியன் என்று நினைத்தேன். ஆனால் இன்று நம்புகிறேன் என்றவன்" என்றான் மகாலிங்கம்.

**எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்**

**கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்**

**எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்**

**மண்மிசை மால்பவர் மாண்டனர்காண் தோணோக்கம். 09**

கதிரேசன் மகாலிங்கத்துக்குச் சொன்னார்; "மகாலிங்கம், சிவனை வலிந்து சண்டைக்கிழுத்து அழிந்த பலர் நல்ல நிலையை அடைந்துள்ளனர். சிவன் எங்கும் இருப்பது போன்று முக்குணங்கள் அவனது திருவிளையாடல்களாக உள்ளன. அதனால் இந்திரர்களும் பிரமாக்களும் கணக்கற்ற பேர் தோன்றவும், மறையவும் செய்கின்றனர். அதனால் தான் திரிபுரத் தகனம் முடிந்த பின்பு, அவற்றில் அழிந்த அரக்கர்கள் மூவரும் கயிலைக்குச் சென்று துவாரகா பாலகராயினர். அதன் பிறகு இந்திரர்களும் பிரமாக்களும் தோன்றினர். அதனால் சிவத் துரோகங்களைச் செய்து விட்டோம் அதற்கு மன்னிப்புக் கிடைக்காது என்று யாரும் அஞ்சத்தேவையில்லை. புராணங்களை எடுத்துப் பார்த்தால் குற்றங்களைச் செய்தவர்களைச் சிவன் தண்டித்துத் தூய்மைப்படுத்தி ஏற்றுக் கொண்டவன். அதனால் யாரும் பயப்பிடத் தேவையில்லை" என்றார் கதிரேசன்.

**பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்**

**தங்கண் இடந்தான் சேவடிமேல் சாத்தலுமே**

**சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவாறு**

**எங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ. 10**

“புராணக் கதைகளை கடவுளை நம்பாதவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. சாதாரணமாக உள்ள நடைமுறைகளையே அவர்கள் விமர்சிக்கின்றனர். பல ஆயிரமாண்டுகளுக்கு முன் கலியுகத்தைப் பற்றிச் சொல்லும்போது கிருஷ்ணபகவான், “எதிர்காலத்தில் முடிவுகளை வயதில் குறைந்தவர்களே எடுப்பார்கள். அறிவுடையவரை ஒதுக்குவர். விளக்குகள் யாவும் தலைகீழாகத் தொங்கும்” என்றார். அப்போது வாழ்ந்த கடவுளை நம்பாதவர்கள் இப்படியும் நடக்குமா என்றனர். இப்போ பெரும்பாலான வீடுகளில் முடிவைப் பிள்ளைகளே எடுக்கின்றனர். இப்போ மின்குமிழ்கள் தலைகீழாகத் தொங்கி ஒளிர்கின்றன. நம் முன்னோரும், புராணங்களும், மற்றும் நூல்களும் சொன்னவை நடந்து கொண்டிருக்கின்றன. அகத்தியர், சந்திரன், சூரியன், செவ்வாய் போன்ற கிரகங்களின் அமைப்பு, அவற்றின் தொழில் பற்றிக் கூறியவற்றைத்தானே இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்றனர். திருமூலர் ஆறாயிரம் வருடங்களுக்கு முன்பு உலகம் வட்டவடிவமானது என்றும், பூமி சூரியனைச் சுற்றுகிறது என்றும், ஒரு வருடத்தில் முந்நூற்று அறுபத்தைந்தே கால் நாள் உள்ளதென்றும் கூறினார். இதைப் பலர் மறுத்தனர். கண்மாற்றுச் சத்திரசிகிச்சை கண்ணப்பரின் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது உடல் உறுப்புக்களை மாற்றலாம் என்ற கருத்தைச் சைவ சித்தாந்தம் என்றோ சொல்லிவிட்டது. பெறுமதியான ஒன்றைப்பெற விரும்புவோர் இன்னொரு பெறுமதியான ஒன்றைக் கொடுத்தேனும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது அன்றே சொல்லப்பட்டது. திருமால் ஆயிரம் தாமரை மலர்களால் சிவனை அர்ச்சித்துச் சக்கராயுகத்தைப்பெற விரும்பினார். அவர் கொண்டு வந்த தாமரை மலர்களில் ஒன்று குறைவாக இருந்தமையால் தனது கண்ணை அவர் தோண்டிக் கொடுத்துச் சக்கராயுதத்தைப் பெற்றுக் கொண்டார். மயூரன் தந்தையை இழந்தவன். தாய் கூலிவேலை செய்து அவனையும், அவனது மூன்று சகோதரிகளையும் வளர்த்து வந்தாள். மயூரனுக்கு வெளிநாட்டுக்குச் சென்று மருத்துவப் படிப்புப் படிக்கச் சந்தர்ப்பம் வந்தது. அவனுக்கு உதவ யாரும் வரவில்லை. அவ்வூரில் வாழ்ந்த பெரிய கோடீஸ்வர வர்த்தகர், மயூரன் தனது மகளைத் திருமணம் செய்தால்தான் உதவுவதாகச் சொன்னார். எதையும் ஆராயாது அதற்கு மயூரன் ஒத்துக் கொண்டான். தனக்கு வரப்போகும் மனைவியை அவன் பார்க்கவேயில்லை. அதனால் அவனது கல்வி நல்லமுறையில் முடிந்தது. அவனது சகோதரிகளுக்குக் கோடீஸ்வரனான வர்த்தகர் நல்ல இடங்களில் திருமணம் செய்து வைத்தார். திருமாலின் செயற்பாடு இப்போதும் நடைபெறுகிறது. தமது தேவையை நிறைவேற்ற மக்கள் பெறுமதியானவற்றைக் கொடுக்கத் தயங்கமாட்டார்கள். இப்போ உடல் உறுப்புக்களைத் தேவைக்காக விற்கும் நிலை வந்துவிட்டது தானே” என்றார் கதிரேசன்.

**காமனுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்**

**நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்ஏரியைச்**

**சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையுந்**

**தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ. 11**

அன்று ஆச்சிரமத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரையாற்றினார்; "பலர் ஆச்சிரமத்திற்கு வந்து இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர். சொற்பொழிவுகளைக் கேட்கின்றனர். ஆனால் அவர்கள் அதைக் கைக் கொள்வதாகத் தெரியவில்லை. மனத்தைச் சுத்தப்படுத்தினாலன்றிச் செய்யும் கருமங்கள் எவையும் வெற்றியளிக்காது. பரம் என்றால் பரம் பொருள். உலகம், அனேகம் எனப் பல கருத்துண்டு. பரமன் என்றால் தூய்மையானவன். உலகைத் தூய்மைப்படுத்துபவன் என்று அர்த்தம். மெய்யன்புடன் ஒரு கணம் அவனை நினைத்தால் நினைப்பவரின் உள்ளம் தூய்மையடையும். அவனை நினைக்கும்போது அவனின் நினைப்பைத் தவிர வேறு எதுவும் இருக்கக்கூடாது. ஆனால் பெரும்பான்மையானோர் அவ்வாறு நினைப்பதில்லை. வணங்கும்போது பல்வேறுபட்ட நினைவுகளுடன் தான் வணங்குகின்றனர். அதனால் மனம் எதைக் கூடுதலாக நினைக்கிறதோ அதுவாகிவிடுகிறது. அதனால்தான் பலர் நினைப்பது நடப்பதில்லை. சிவன் தூய்மைப்படுத்துபவன். அவன் காமனையும், காலனையும், கதிரோனையும், பிரமனையும், தக்கனையும், எச்சனையும் தூய்மைப்படுத்தியவன். உலகில் வாழ்பவர்கள் எந்த வகையிலாவது தொடர்பு கொண்டால் அவர்கள் தூய்மையடைவர். வரதன் சிவபூசையின்போது மேளம் அடிப்பவன். பறை மேளத்தை சிவன் ரசித்து ருசித்து அனுபவித்து மகிழ்பவன் என்று தெரிந்த வரதன், தனது பிள்ளைகள் இனத்தவர் வெறுத்தபோதும் அதைச் செய்வதால் சிவனைத் தான் நெருங்கியிருப்பதாகக் கூறுகிறான். சிவனை நினைத்தால் அவன் வசமாகிவிடுவான். அதன்பின் அவனும் சிவனும் ஒன்றாகிவிடுவர். அதனால் உயர்வு, தாழ்வு, தகுதி, சாதி யாவும் அற்றுவிடும். சிவனடியான் என்ற மேன்மையான நிலை உருவாகிவிடும். அத் தூய்மையான நிலை, சிவனால் தூய்மைப்படுத்தப்பட்ட நிலை. அதனால்தான் மெய்யடியார் என்ற நிலையில் தூய்மைப்படுத்தப்பட்ட வரதன் பொங்கிய பொங்கலை நான் பெருமகிழ்வுடன் வாங்கி உண்கிறேன். இது பற்றி யாரும் எதையும் சொல்லலாம் என்பார் கதிரேசன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பிரமன் அரியென் றிருவருக்கம் பேதைமையால்**

**பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க**

**அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து**

**பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ. 12**

"சிவனடியார்களே, பிரமனும் அரியும் தமது அறியாமையால் தாம் தாம் பெரியவர்கள் என்று சண்டையிட்டபோது சிவன் சோதிப்பிழம்பாகி இருவருக்கும் எதிரே நின்று, தனது அடிமுடியைக் கண்டறிபவரே பெரியவர் என்று சொல்லி அவர்களது அறியாமையை நீக்கினார். பிரகிருதியைத் தான் என்று உணர்வது அகங்காரம். அகங்காரத்தை அகற்றியவரே சிவனுக்கு விருப்பமானவராவார். அவர்கள் அகண்ட வஸ்துவில் ஒன்றுபடுகின்றனர். இது புராணக் கதையாக இருந்தாலும் இன்று மக்களிடம் காணப்படும் பிரதானமான பொருளாகிறது. அகந்தை எப்பொழுதும் அழிவையே தரும் என்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அப்போது மதுவைக் குடித்துவிட்டு நடக்க முடியாதபடி தள்ளாடி வந்த வரோதயன் கதிரேசனைத் தேடினான். அவர் அதை அறிந்து வந்து சொன்னார்; "இது சிவத்தலம். குடித்துவிட்டு வந்து அதன் புனிதத்தன்மையைக் கெடுக்காதே என்று பலமுறை சொல்லியும் நீ கேட்பதாக இல்லை" என்றபோது வரோதயன் சொன்னான்; "குடிப்பவர்களால் மட்டும் தானா ஆச்சிரமத்தின் புனிதத்தன்மை கெடும். கள்ளப் பொம்பிளை வைத்திருப்பவனால் புனிதம் கெடாதா? இப்பவும் கலையரசி மகாலிங்கத்தோடுதான் இருக்கிறாள். அவர் பூசைக்குப் பூப்பறித்தால் புனிதத்தன்மை. நான் குடித்தால் புனிதத்தன்மை கெட்டுவிடும். அப்படித்தானே" என்று சண்டைக்குப் போனான்.

"பிரகிருதியைத் தான் என்று நினைப்பவன் தான் நினைத்ததை மாற்றமாட்டான். அதனால் அவனை வெளியேற்றுங்கள்" என்றதும் நாலைந்து இளைஞர்கள் வந்து அவனைத் தூக்கிச் சென்றனர். வெகுதூரத்தில் இறக்கி விட்டுவிட்டு ஒருவன் சொன்னான்; "மகாலிங்கம் ஒரு காலத்தில் கெட்டவன் தான். இப்போ சிவனை வணங்கத் தொடங்கியபின்பு தூய்மைப்படுத்தப்பட்டுவிட்டான். அவன் முன்பு செய்த பாவம் கலையரசி உருவில் அவனைத் தொடர்ந்து துன்புறுத்துகிறது. அதையும் இப்போ நீக்கியாயிற்று. அவளை ஊரைவிட்டே கலைத்துவிட்டோம். எதற்கும் தான் தான் பெரியவன், தான் செய்வது தான் சரி என்று சொல்பவனைத் திருத்த வேண்டும்" என்று

கூறி வரோதயனைப் பலமாகத் தாக்கினர். அவனால் அத்தாக்குதலைச் சமாளிக்க முடியாததால் கையெடுத்துக் கும்பிட்டு, "இனிமேல் நான் குடித்துவிட்டு கோவிலிலோ அல்லது ஆச்சிரமத்திலோ சண்டையிடமாட்டன்" என்று சொல்லும்வரை அடித்தனர். வீதியால் சென்றவர்கள் வேடிக்கை பார்த்து, "உனக்கு எப்பவோ அடித்திருக்க வேண்டும்" என்றனர்.

**ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்**

**பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே**

**ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்**

**தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ. 13**

மகாலிங்கம் உணர்ச்சி வசப்பட்டார். தன்னை நம்பிய கதிரேசனை நினைக்க அவருக்கு மெய்சிலிர்த்தது. ஊரவர் சொல்வது போல அவர் நடமாடும் சிவன்தான். மாணிக்கவாசகர் சொல்வது போல "ஏழைத் தொண்டனானேன். பிரபஞ்சமே காலச் சொரூபமாகும். உலகம் அழியும் தன்மையானது. அதை அறியாது அதை நிசமென்று நினைத்து வாழ்வைப் பாழாக்கிவிட்டேன். பரமன் நிலையானவன். அதனால் அழியாதவன், கேடில்லாதவன். அவனைச் சாரும்போது பிறவிவேர் அவனால் முழுமையாக எடுக்கப்படுகிறது. அதற்காகத் தோணோக்கம் ஆடுவேன் என்பதைப்போல நிலையில்லாத பொருட்களையெல்லாம் நிலையானவை என்று நம்பியதால் தான் நான் அகங்காரம் கொண்டு துன்பத்தில் உழன்றேன். இப்போது கதிரேசனது உபதேசத்தால் அழிவில்லாத சிவனை அறிந்து கொண்டேன். எனினும் முன்னைய நடவடிக்கைகளின் தொடர் என்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. அதனால்தான் வரோதயனும் கலையரசியும் திட்டமிட்டு என்னைத் துன்புறுத்தி வந்தனர். இன்று சிவனின் அருளால் அத்துன்பம் நீங்கி விட்டது. இனிச் சிவனை மெய்யன்போடு வழிபடலாம். இவ்வளவு காலமும் சிவனை மெய்யன்போடு வழிபட எனது பழைய பாவம் விடவில்லை" என்றான் மகாலிங்கம்.

**உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம்புகலும்**

**கரைமாண்ட காமபட்பெருங்கடலைக் கடத்தலுமே**

**இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்**

**துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ. 14**

மகாலிங்கம் நெய்யுடன் உணவு உண்டால் அது உண்டபின்பும் கையில் உள்ள வாசம் போகாது. அதைப்போலத் தீயசெயல்களை விரும்பாது செய்தாலும், அப்பாவம் தீர நாள்ச்செல்லும். நீ அறிந்தறிந்து தீமை செய்தவன். அதனால் அதன் தாக்கம் உன்னைத் தாக்கத்தான் செய்யும். சோதிமயமான சிவபெருமான் சொற்களுக்கு அப்பாற்பட்டவன். அவன் ஒரு தூய உள்ளத்துள் வந்து சேர்ந்துவிட்டால் கரைகாணாத ஆசைக்கடல்களையும் கடக்கலாம். இந்திரியப் பறவைகள் கெட்டு அழியும். நான் என்ற அகங்காரமும் போய்விடும். பற்றுக்களில் கொடிய பற்று பெண்பற்று. ஒரு பெண்ணை மனம் விரும்பினால் அது அவளுடன் கூட நினைக்கும். மனம் எதை நினைக்கிறதோ அதை இந்திரியங்கள் எல்லாம் வெறியுடன் விரும்பும். ஆனால் நீ கலையரசியை வெறுக்கி ஒதுக்கிவிட்டாய். இப்போ மனதில் அவளின் எண்ணம் இல்லை. இனி அந்த எண்ணத்தை வரவிடாது சிவநினைவு தடுக்கும். முன்பென்றால் உன்னுடன் சற்றுக் கோபமாகக் கதைத்தாலே ஆளை ஏவிவிட்டுக் கதைத்தவனைத் தாக்குவிப்பாய். இப்போ பல தடவைகள் வரோதயன் உன்னைப்பற்றி மிகவும் கேவலமாகப் பேசியும் நீ அவனைத் தாக்கவில்லை. முன்பென்றால் உன்னுடன் கோபமாகப் பேசத்தயங்கிய வரோதயன் இப்போ உன்னைத் தாக்கியும் நீ அவனைத் தாக்கவில்லை. இது ஒரு பெரும் மாற்றம். சிவசிந்தனை உனது மனதைப் பற்றிப்பிடித்துவிட்டமையைக் காட்டுகிறது. அதனால்தான் குடித்துவிட்டு ஆச்சிரமத்தில் கலகம் செய்த வரோதயனைச் சுவாமியார் இளைஞர்களைக் கொண்டு வெளியேற்றினார். இனி நீ ஆச்சிரமத்தில் தங்கி, ஆச்சிரமச் சிவனுக்குத் தொண்டு செய்” என்றார் கதிரேசன்.

முன்பு சுவாமியார் மகாலிங்கத்தை ஆச்சிரமச் சிவனுக்கு மாலை போடக்கூட விடுவதில்லை. இப்போது கதிரேசன் சொன்னதும் மிக்க மகிழ்வுடன் ஆச்சிரமச் சிவனை நினைத்தார் மகாலிங்கம். அவரது மனதில் பெருமகிழ்வு உண்டானது.

திருச்சிற்றம்பலம்